முருகப்பெருமான் துணை

**மகான் சுந்தரமூர்த்தி அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

15.11.2022, செவ்வாய்கிழமை

1. மகத்துவம் தந்தருளி உலகினில்
   மாற்றம்புரிய அவதாரம் புரிந்த
   அகத்தியம் ஆறுமுகமும் இணைந்த
   ஆறுமுக அரங்கமகா ஞானியே
2. ஞானியே உன் பெருமை கூறி
   நாட்டிடுவேன் சுபகிருது துலை திங்கள்
   இனிமைபட இருபான்நவதிகதி குசன்வாரம்
   (சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் 29 ம் நாள் 15.11.2022 செவ்வாய்கிழமை)
   இயம்பிடுவேன் அனுகூல ஆசிதனை
3. ஆசிதனை சுந்தரமூர்த்தி யானும்
   அருளுவேன் உலகோர் நலம்பெற
   வாசிவென்ற ஞானிகள் படை
   வலம்வந்து அரங்கனுடன் இருக்க
4. இருக்கவே கலியுக மக்கள் தானும்
   ஏழாம்படை வீடெனும் பிரணவக்குடிலை
   கருத்தாக அனுகி வந்துமே
   கந்தப்பெருமானின் சடாட்சர தீட்சை
5. தீட்சைதனை ஏற்று இனிதே
   தொடர்ந்து சன்மார்க்க வழிவர
   தீட்சைபலமாக குருவருள் கூடி
   தெரிவிப்பேன் ஞானவான்கள் ஆவர்
6. ஆவரே அரங்கன் தேற்றுகின்ற
   ஆற்றல் மிக்கவர்களாக மாறி
   அவனி காக்கும் சக்திகளாக
   அனைவரும் ஞானிகள் ஆவர்
7. அவனியில் அரங்கமகான் தரும்
   அன்னதான வழிமுறைகளை
   அவரவரும் ஏற்று செய்துவர
   அன்னதான பலம் தரும வேலியாக
8. ஆகவே பாதுகாப்புப்பெருகி
   அகிலம் சுத்த ஞானிகள் நிறைந்த
   யுகமாற்றம் தருகின்ற வண்ணம்
   உண்மையான தலைமைகள் கொண்ட
9. கொண்ட ஞான பூமியாக
   குவலயமே மாற்றம் கண்டு
   தொண்டர்களெனும் அரங்கமகான்
   தெய்வ சக்திமிகு ஞானப்படைகளால்

10. படைகளால் ஆளுமை சிறந்து
பாடிடுவேன் ஞான ஆட்சியும்
தடைகளின்றி அரங்கனால் அமையும்
தரணிக்கு தனிப்பெருமை நிலை கூடி

11. கூடியே ஆறுமுகப் பெருமானுடன்
குருவருள் திருவருள் நிறைந்த
கூடிடும் ஞானிகள் ஆட்சியாக
கூறிவந்த அனுகூல ஆசி முற்றே

–சுபம்–